முக்கிய வார்த்தைகள்:
*நேர்மையான / பரிசுத்தமான*
*மறைமுகமான*
*முயற்சி*
*நிலையான*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**06 பிப்ரவரி 2026 / 18 ரஜப் ஹிஜிரி 1447**

## <u>நேர்மை : ஒரு மறைமுகமான நற்காரியமாகும்</u>

**اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا اللهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اتَّقُوا اللهَ. أُوصِي نَفْسِي وَإِيَّاكُمْ بِتَقْوَى اللهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ الْمُتَّقُونَ.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
சுப்ஹானஹு வதஆலாவை உண்மையாகவே நினைவில் கொண்டு, அவனைப் பயந்து கொள்வோமாக! அல்லாஹ்வின் மீது ”தக்வா” [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்து கொள்வோமாக; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக. நமது எண்ணங்களைப் **பரிசுத்தமாக்கிக்** கொள்வோமாக! அப்போது தான், நமது ஒவ்வொரு செயலையும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டுமென்ற நோக்கில் நாம் நிறைவேற்ற முயல்வோம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது உள்ளங்களையும் செயல்களையும் அனைத்துவிதமான அசுத்தங்களை விட்டும் பரிசுத்தமாக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் மரியாதையுமிக்க ஜமாஅத்தார்களே!**

நம்மிடம் ”இக்லாஸ்” எனப்படும் நேர்மையான சிந்தனை காணப்படுகின்றது என்பதை எப்படி நாம் அறிந்து கொள்வது? பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள இக்காலத்தில், நமது நற்காரியங்கள் மற்றவர்களின் பார்வைகளை விட்டும் **மறைந்ததாக** இல்லை. இந்நிலையில், நமது இக்ஸாஸ் எனப்படும் **நேர்மையான எண்ணத்தைப்** பாதுகாப்பது மிகக் கடினமான விஷயம் எனக் கருத முடியுமா?

எனது அன்பிற்குரிய சகோதரர்களே! நமது மார்க்கத்தின் ஒவ்வொரு முக்கிய விஷயமும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் விஷயத்தில் **நேர்மையான** எண்ணம் கொள்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது என இஸ்லாம் வலியுறுத்திக் கூறுகிறது. திருக்குர்ஆனின் ”அல்-பய்யினா” எனும் அத்தியாயத்தின் 5-வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَآ أُمِرُوٓا۟ إِلَّا لِيَعْبُدُوا۟ ٱللَّهَ مُخْلِصِينَ لَهُ ٱلدِّينَ حُنَفَآءَ وَيُقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ وَيُؤْتُوا۟ ٱلزَّكَوٰةَ ۚ
وَذَٰلِكَ دِينُ ٱلْقَيِّمَةِ ٥

பொருள்: ”அல்லாஹ்வுக்கு வணக்கத்தைத் தூய்மையாக்கியவர்களாகவும், மார்க்க விஷயத்தில் அல்லாஹ்வுக்கு **நேர்மையானவர்களாகவும்,** உண்மையின் பக்கம் சாய்ந்தவர்களாகவும் இருந்து, அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும்; மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்ட வேண்டும்; ஜகாத்தை வழங்க வேண்டும் என்பதைத் தவிர [வேறெதுவும்] அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இதுதான், நேரான மார்க்கமாகும்”

தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, நமது சன்மார்க்க வாழ்க்கையானது **நேர்மையை** அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென நமக்கு

நினைவூட்டுகிறது, **நேர்மை** இல்லையெனில், நன்மையின் பாதையில் நாம் **நிலைத்து நிற்பது** கடினம் எனவும் சுட்டிக் காட்டுகிறது.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

**நேர்மை மற்றும் மனத்தூய்மை** என்பதன் பொருள், நாம் நமது நற்காரியங்கள் அனைத்தையும் யாருக்கும் தெரியாமல் மறைமுகமாகச் செய்ய வேண்டும் என்பதல்ல; மற்றவர்களை நன்மை செய்வதற்குத் தூண்ட வேண்டும் எனும் எண்ணம் நம்மிடம் இருக்குமெனில், நமது நற்காரியங்களை மற்றவர்களுக்குத் தெரியும் படிச் செய்யலாம் என அறிஞர்கள் கூறுகிறார்கள்; அந்நற்காரியங்கள், மற்றவர்கள் நம்மைப் புகழ வேண்டும் எனும் நோக்கில் செய்யப்பட்டிருக்கக் கூடாது எனவும் அறிஞர்கள் கூறுகிறார்கள். அதே சமயம், நமது எண்ணங்களின் தூய்மையைப் பாதுகாப்பதற்காகவும், நமது உள்ளங்களைப் பரிசுத்தமான வையாக ஆக்குவதற்காகவும் நமது நற்காரியங்களில் சிலவற்றை **மறைத்துச்** செய்ய வேண்டுமெனவும் இஸ்லாம் நமக்குப் போதித்துள்ளது.

இக்கருத்து, பின்வரும் ஆதாரப்பூர்வமான ஹதீதுகளில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்: ”ஒரு மனிதர் தர்மத்தை **புத்திசாலித்தனமாகக்** கொடுத்து வந்தார்; அதாவது, அவரது வலது கை கொடுக்கும் தர்மத்தை அவரது இடது கைக்குக் கூடத் தெரியாமல் கொடுத்து வந்தார்” அவ்வாறே, இறைத்தூதர்[ஸல்] அவர்களின் தோழர்களில் ஒருவரான அஜ்-ஜுபைர் பின் அல்-அவ்வாம் [ரலி] கூறுகையில்: ”உங்களில் ஒருவர் தனது நற்காரியங்களை **மறைத்துச்** செய்ய முடியுமெனில் அவ்வாறு செய்து கொள்ளட்டும்” எனக் கூறினார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இப்னு அபூ ஷைபா ரஹ்]

எனவே, அல்லாஹ்வின் விஷயத்தில் நாம் **நேர்மையாக** நடந்துள்ளோம் என்பதற்கு அடையாளமாக, நமது நற்காரியங்களில் எவை, நமக்கும் அல்லாஹ்வுக்கும் மட்டும் தெரியும் வகையில் செய்யப்பட வேண்டுமென்பதை நாம் சிந்தித்துப் பார்ப்போமாக! இங்கு, ஒரு

முஸ்லிமின் நடத்தையை, ”இக்லாஸ்” எனும் **நேர்மையும்** மனத்தூய் மையும் எவ்வாறு உடன்பாடானதாகவும் ஆக்கப்பூர்வமானதாகவும் ஆக்குகின்றது என்பதை விளக்கி, இரண்டு வழிமுறைகள் உங்களுக்கு வழங்கப்பட உள்ளன:

**முதலாவதாக: ”இக்லாஸ்” எனும் நேர்மையான எண்ணமானது, வாழ்க்கையின் தெளிவான நோக்கத்தை நமக்கு வழங்குகிறது.**

”அல்-காலிக்” அதாவது, அனைவரையும் படைத்துப் பாதுகாத்து வரும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதை, தனது இறுதி நோக்கமாக அமைத்துக் கொள்ளும் ஒருவர், படைப்புகளிடமிருந்து தனக்கு அங்கீகாரமும் புகழும் கிடைக்க வேண்டுமென ஒருபோதும் விரும்பமாட்டார். பின்வரும் விஷயங்களில் நாம் சிந்தனை செய்ய வேண்டும்: கஷ்டப்படும் ஒருவருக்கு அமைதியாக, யாருக்கும் தெரியாமல் உதவுவதும், கணவனும் மனைவியும் இரவுப் பொழுதில் தங்கள் குடும்பத்தை நிர்வகிப்பதும், ஒரு பிள்ளை தனது பெற்றோரின் நலனுக்காகத் தொடர்ந்து பிரார்த்தனை செய்வதும், இவர்களெல்லாம் தமது உணர்வுகளை வெளிப்படுத்த கஷ்டப்பட்ட போதிலும் இது போன்ற நற்காரியங்களைச் செய்வதானது, ஒரு வகையில் வணக்க, வழிபாடாக அமைகின்றது. அல்லாஹ்வின் பார்வையில் இவை மதிப்புமிக்க செயல்களாக அமைகின்றன; அவை இக்லாஸுடன் **நேர்மையாகச்** செய்யப்பட்டால், அவற்றை நிறைவேற்றுவது அவர்களுக்கு எளிதாகி விடும்.

**இரண்டாவதாக: நேர்மையான எண்ணமாகிறது, நற்காரியங்களைச் செய்வதில் நிலைத்து நிற்கும் ஆற்றலை நமக்கு வழங்குகிறது.**

சூழ்நிலைகள் அல்லது மனிதக் கருத்துக்கள் மாறி விட்ட போதிலும் தொடர்ந்து ஒரு முஸ்லிம் உறுதியாக இருப்பதற்கு **நேர்மையானது** வழிகாட்டுகிறது. இப்படிப்பட்ட முஸ்லிம் உபதேசங்களைக் கேட்பதற்கும் அவற்றைப் பற்றிச் சிந்திப்பதற்கும் தொடர்ந்து திறந்த மனதுடன் காணப்படுவார். அவ்வாறே, மற்றவர்களுக்கு அவர் உபதேசம் செய்யும் போதும் நுட்பமான வழியைப் பின்பற்றுபவராக இருப்பார்; காரணம்,

மற்றவர்களைத் திருத்த முயலும் போது ”இஹ்ஸான்” எனும் உபகாரச் சிந்தனையும் கருணைச் சிந்தனையும் நம்மிடம் காணப்படுவதும் இக்லாஸ் எனும் **நேர்மையாகும்**.

ஒரு **நேர்மையான** முஸ்லிம் மற்றவர்களை அணுகும் போது கிருபையுடனும் கவலையுடனும் அணுகுபவராக இருப்பார். நீதி, நேர்மையையும் மற்றவர்களின் நலனையும் கவனத்தில் கொள்பவராக இருப்பார்; இவையெல்லாம், அன்றைய முக்கிய விஷயங்களாக உள்ளன என்பதற்காக இல்லாமல், சிறந்த கொள்கைகள் மற்றும் ஓரிறை நம்பிக்கையின் மதிப்பீடுகள் ஆகியவற்றின் தூண்டுதலின் பேரில் அவற்றைச் செய்பவராக இருப்பார்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே**!

நமது ஒவ்வொரு செயலையும் மதிப்பீடு செய்து கொள்வோமாக! ”இக்லாஸ்” எனும் **நேர்மையையும்** மனத்தூய்மையையும் பாதுகாக்க முயல்வோமாக! நற்காரியங்களைத் **தொடர்ந்து செய்வதற்கு** பணிவான நடத்தையால் நம்மை அலங்கரித்துக் கொள்வோமாக! எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது நல்ல **முயற்சிகளை** - மக்கள் அவற்றைப் பற்றி அறிந்திருந்தாலும் அறியாவிட்டாலும் - ஏற்றுக் கொள்வானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالِمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وِللَّناسِ أَجْمَعِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنْيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسانِ وَإِيتاءِ ذِي الْقُرْبى، وَيَنْهى عَنِ الفَحْشاءِ وَالمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.